**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**
**D041 மொழி வரலாறு –2**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சொல்லின் இடையில் மெய்யெழுத்துகள் தன்னுடன் தான் மயங்கி வருவதற்குரிய சான்று தருக?
2. வகரம் எவ்வுயிர்களுடன் சேர்ந்து மொழி முதலில் வருவதில்லை?
3. சகர மாற்றத்திற்கான சான்று தருக?
4. எத்தனை வகையான வேற்றுமைகள் இக்கால எழுத்துத் தமிழில் வழக்கில் உள்ளன?
5. தொல்காப்பியர் குறிப்பிடும் இடைநிலைச் சுட்டுப்பெயர்கள் யாவை?
6. இருபெயர்ச் சொற்களுடன் தொடர்புபடுத்திக் கொள்ளும் வேற்றுமை யாது?
7. தற்காலத்தில் அமைந்து வரும் எதிர்கால இடைநிலைக்கான சான்று தருக?
8. இலக்கண கூறு என்பது யாது?
9. நன்னூலார் கூறும் மொழியின் வகைகளைக் குறிப்பிடுக?
10. தமிழில் வழங்கும் எதிரொலிச் சொற்களுக்குச் சான்றுகள் தருக?
11. ஆகுபெயராக்கல் மாற்றம் எதன் அடிப்படையில் அமைகிறது? சான்று தருக?
12. வன்பொருள் பேறு என்றால் என்ன?
13. வருடொலிகள் எவையெவை?
14. அகச்சந்தி எவ்வாறு அமையும் சான்று தருக?

15. ஔகாரம் சொல்லில் எந்த இடத்தில் வரும்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. மாற்று ஒலி என்றால் என்ன? சான்று தருக?
2. சொல்லெழுத்து வரையறை செய்க?
3. வேற்றுமைப்பொருள் உணர்த்தும் முறை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. பயன்பாட்டுக் கோட்பாட்டினை விவரிக்க?
5. ஒருசொல் பலபொருள் உருவாகக் காரணங்களைக் கூறுக.
6. சிறப்புப்பொருள் பேறு எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
7. தாழ் நடு உயிர் ஒலிகள் எவ்வாறு பிறக்கின்றது?
8. ஒலிக்கருவிப் பாகுபாடு குறித்து எழுதுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) எழுத்துக்கும் மொழிக்கும் உள்ள உறவு குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) எழுத்துச் சீர்திருத்தம் குறித்து வரலாற்று நோக்கில் ஆராய்க.

2. (அ) வேற்றுமை வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சொல்லுருபுகளின் வகைப்பாடுகளை விளக்கி வரைக.

3. (அ) ஒருசொல் பலபொருளின் வகைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) உயிர் ஒலிகளின் பிறப்பும் பாகுபாடும் குறித்துக் கட்டுரை எழுதுக.

*** *